**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | | |
|---|---|---|
| CC No. | : | 67/2020 |
| Name | : | Ranganathan |
| P.W. | : | 3 |
| Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | Madathukulam |
| Occupation | : | |
| Age | : | /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **30.01.2026**

**எதிரிகள் 1 மற்றும் 2 நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது ரெட்டிபாளையத்தில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். 04.11.2019ம் தேதி காலை சுமார் 11 மணியளவில் எனது இருசக்கர வாகனத்தில் தற்போது இறந்துவிட்ட எனது நண்பர் குணசேகரனை அழைத்துக்கொண்டு அவரது தோட்டத்தில் விட சென்றேன். குணசேகரன் தோட்டத்திற்கு முன்பு கொமரலிங்கம் போலீசார் வழக்கு சம்மந்தமாக விசாரித்து சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தார்கள். என்னிடம் சாட்சியாக கையொப்பம் கேட்டார்கள் நான் போட்டேன். என்னுடன் சிவக்குமார் என்பவரும் கையெழுத்து போட்டார். என்னிடம் காட்டப்படும் பார்வை மஜரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையதுதான். **பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) நான் கையொப்பம் செய்த ஆவணத்தை படித்து பார்த்து தான் கையெழுத்து

போட்டேன். நான் கையொப்பம் செய்த தாள் கையால் எழுதப்பட்டிருந்தது. ஒரு கையெழுத்து தான் போட்டேன். எதற்காக கையெழுத்து போட்டேன் என்றால் ரோட்டில் சென்று கொண்டிருந்த போது சம்பவம் சம்மந்தமாக விசாரித்தற்காக கையெழுத்து போட்டேன். சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்துவிட்டு தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.01.30 13:18:23 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்